**செய்தி வெளியீடு எண்: 361** **நாள்:01.07.2021**

**நிதி (வழிவகைகள்–II)த் துறை**
**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு அரசு **ரூபாய் 1000.00 கோடி மதிப்புள்ள பங்குகள் வடிவிலான 10 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் மற்றும் மறுவெளியீட்டின் வாயிலாக ரூ.1000.00 கோடி மதிப்புள்ள 6.83 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2031** ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் **ஜூலை 06, 2021** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.30** மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.00** மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **ஜூலை 06, 2021** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
நிதித்துறை, சென்னை–9.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**